# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, UDHAGAMANDALAM

(Chapter XXIII Code of Criminal Procedure)

**C.C.No. 115/2024**

DEPOSITION OF WITNESS : **அ.சா.6**

NAME : **நஞ்சன்**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**DATED: 14.07.2025 (சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை**

| | | |
|---|---|---|
| **கேள்வி** | : | நான் எப்பொழுது ஓய்வு பெற்றேன் என்றால் ? |
| **பதில்** | : | 30.06.2001 |
| **கேள்வி** | : | நான் எவ்வளவு காலமாக ஊட்டியில் கூட்டுறவு தணிக்கை துறையில் ஆடிட்டராக பணிபுரிந்தேன் என்றால் ? |
| **பதில்** | : | 35 வருடங்களாக பணிபுரிந்தேன். |
| **கேள்வி** | : | கூட்டுறவு சங்கத்தின் நிதி ஆண்டு எப்பொழுது தொடங்கி முடிவடைகிறது என்றால் ? |
| **பதில்** | : | கூட்டுறவு சங்கத்தின் நிதி ஆண்டு ஜீலை மாதம் 1ம் தேதி தொடங்கி ஜீன் மாதம் 30ம் தேதி முடிவடைவதாக முன்பு இருந்தது. ஆனால் தற்போது ஏப்ரல் 1ம் தேதி தொடங்கி மார்ச் 31ம் தேதி முடிவடைகிறது. |
| **கேள்வி** | : | எந்த வருடத்தில் இருந்து ஏப்ரல் 1ம் தேதி நிதி ஆண்டு கூட்டுறவு சங்கங்களில் தொடங்கியது என்றால் ? |
| **பதில்** | : | தற்போது ஞாபகம் இல்லை. |
| **கேள்வி** | : | கூட்டுறவு சங்கத்தில் ஆண்டு தணிக்கை எந்த முறையில் நடைபெறுகிறது என்றால் ? |
| **பதில்** | : | கூட்டுறவு சங்க ஊழியர்கள் தணிக்கை செய்து அறிக்கை தயார் செய்து வைப்பார்கள் அந்த அறிக்கையை நாங்கள் ஆய்வு செய்வோம். |

| | | |
|---|---|---|
| **கேள்வி** | : | கூட்டுறவு சங்கத்தில் ஆண்டு தணிக்கை செய்ய வேண்டும் என்றால் அந்த சங்கத்தில் இருந்து எங்களுக்கு வேண்டுகோள் அளித்த பிறகு தான் நாங்கள் அங்கு சென்று ஆய்வு செய்வோம் என்றால் ? |
| **பதில்** | : | சரிதான். |
| **கேள்வி** | : | எந்த எந்த இனங்களுக்கு ஆய்வு செய்யவேண்டும் என்று எங்களுக்கு வழங்கப்படும் வேண்டுகோள் கடிதத்தில் குறிப்பிடுவார்கள் என்றால் ? |
| **பதில்** | : | சரிதான். |
| **கேள்வி** | : | கூட்டுறவு சங்களின் தணிக்கை அலுவலர், கூட்டுறவு சங்கத்தில் எவ்வாறு தணிக்கை செய்யவேண்டும் என்ற நடைமுறைகள் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டபிரிவு 80 மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் விதிகள் 101 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ? |
| **பதில்** | : | சரிதான். |
| **கேள்வி** | : | மேற்படி சட்டப்பிரிவிலும், விதிகளிலும் கூட்டுறவு சங்க தணிக்கை அலுவலர் தணிக்கை அலுவலரின் அதிகாரம் மற்றும் வரையறைகளும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ? |
| **பதில்** | : | சரி தான் |
| **கேள்வி** | : | NDCC Bank Manjoor Branchல் எந்த இனங்களை தணிக்கை செய்ய வேண்டும் என்று எனக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது என்றால் ? |
| **பதில்** | : | இல்லை. பொதுவாக அனைத்து வரவு செலவு குறித்து தான் தணிக்கை செய்யுமாறு கூறப்பட்டது. |
| **கேள்வி** | : | நான் என்னுடைய தணிக்கை காலங்களில் எப்பொழுதாவது மஞ்சூர் வங்கி கிளைக்கு சென்று தணிக்கை செய்தது உண்டா என்றால் ? |
| **பதில்** | : | இல்லை. அவ்வாறு செய்வதற்கான வாய்ப்பே இல்லை. |
| **கேள்வி** | : | எங்களுடைய கூட்டுறவு சங்க தணிக்கை துறையில் நீலகிரி மாவட்ட |

| | | |
|---|---|---|
| | | அலுவலகத்தில் எத்தனை ஊழியர்கள் பணிபுரிந்தார்கள் என்றால் ? |
| **பதில்** | : | இரண்டு பேர். |

**வயதின் மூப்பின் காரணமாகவும், காது கேளாமையின் காரணமாகவும் சாட்சியால் தெளிவாக பதில் அளிக்க இயலவில்லை என்பதால் இவருடைய சாட்சியம் இத்துடன் முடிக்கப்பட்டது.**

E SASIKALA

Digitally signed by E SASIKALA
Date: 2025.07.14 17:48:50 +0530